செ.வெ.எண் :683 நாள்: 20.10.2021

# செய்திக் குறிப்பு

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் **தலைவர் திரு.சா.பீட்டர் அல்போன்ஸ், துணைத் தலைவர் திரு. டாக்டர்.த.மஸ்தான்** மற்றும் ஆணையக்குழு உறுப்பினர்கள் வருகின்ற 26.10.2021 அன்று தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர். சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளையும் 26.10.2021 (செவ்வாய்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் சந்தித்து சிறுபான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கவும் கருத்துக்களை கேட்டறியவும் உள்ளனர்.

அவ்வமயம் சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் மாநில சிறுபான்மையினர் ஆணையக்குழுவினரை சந்தித்து தங்களது குறைகளையும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், சிறுபான்மையினர் நல மேம்பாட்டிற்கான தக்க கருத்துக்களையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**